23

894-3111
2472

உ

கடவுள் துணை.

சுப்பிரமணியர்

திருவிளையாடலென்னும்

வளையற்சிந்து.

இஃது

தஞ்சைமாநகரம் கருந்தட்டாங்குடி

அஷ்டாவதானம்,

க. இராமஸ்வாமி பிள்ளையவர்களால்

இயற்றியதை,

பி. நா. சிதம்பரமுதலியார்

பிரதர்ஸ் அவர்களது

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1924.

இதன் விலை அணா-1.

சுப்பிரமணியர் திருவிளையாடலென்னும்
வளையற்சிந்து.

முளைக்கொட்டுபாட்டு மெட்டு.

நங்க நங்க நாக நங்க நாக நங்க நான நகநான நங்க நான நக

செந்தில்வடி வேலவன்மேற் சிந்துதமிழ்பாட—முன்னால்
வந்தவினையோட—வரந்
தந்திடுங்கைகூடி—இசைச்
செஞ்சொன்மிகுந் தஞ்சைவெள்ளைக்—குஞ்சரங்காப்பாமே. க

மந்தரஞ்சேர் குறத்திவள்ளி மாதையணைந்தோனே—திரு
மாலின்மருகோனே—ஒரு
போதுமறவேனே—இனி
மலர்ப்பதத்தைத் துதிப்ப வரமருள்சீமானே. உ

 சுப்பிரமணியர் வளையற்சிந்து.

170863

தீராத வல்வினையைத் தீர்க்கும்வடிவேலன்—புகழ்
ஏர்க்குமுமைபாலன்—எனைக்
காக்குமனுகூலன்—வளைச்
செட்டிகதை கூறவே—மட்டலர் தாட்டுணையே. ௩

மஞ்சுள்வுறு தினைப்புனத்தில் வள்ளியின்மே னினைவாய்—சுகங்
கொள்ளமனநகனிவாய்—புரம்
உள்ளமிகுந் துணிவாய்க்—குகன்
வளையற் செட்டியாங் கதைக்கு மலர்மகள் காப்பாமே. ௪

பஞ்சவிலக்கண நிபுணன் பாரதிநாவாசன்—சிலை
மாரனும்பிரகாசன்—ஈழத்
தூரன்குகதாசன்—ஜகம்
பரவியசண் முகனென்குரு—திருவடியைப் பணிவாம். ௫

ஆயிரத்தெண் ணூறுதொண் ணூற் றாறுமந்தநூலை—மதி
வாரமந்தக்காலே—புனர்
பூசநல்லதாலே—தமிழ்
ஆக்கியோன்பே ரறியவெனிற்—பார்த்துக்கொள்பின் னாலே. ௬

தஞ்சைநகரந் தையட்டாவ தானிகுணபோஜன்—ராம
சாமிகவிராஜன்—புவி
ராஜர்மெச்சநேசன்—சிந்து
தானிசைத்திட் டானுலகும்—வான்புகழ்விஸ்வாசன். ௭

நூல்.

தோமகசூர்மனுயிர் தொலைத்த மயில்வாகன்—அவன்
முனிக்கருள் செய்யோகன்—வள்ளிக்
கொடிக்குமனுபோகன்—சிவ
சுப்பிரமணியர் கொடிகளைப்பைந்—தொடியமைத்திட்டாரே. ௮

வளையல் மரகதவயிர வர்ணமதுதோர்க்கும்—பெண்கள்
மனதையுள்ளாக்குஞ்—செட்டி
வருவதைக் கண்பார்க்கும்—வள்ளி
வசிக்கும் தினைப்புனந்தனக்கு—வள்ளல்பதம் நோக்கும். ௯

வளையலைத்தோ ளணிந்துகையில் வாங்கியதண்டேன்றி—யுயர்
வனங்கடனைத்தாண்டி—ஸ்ரீ
மாயவனைவேண்டிக்—கிழ
வடிவமென்ன நரைதிரைகள்—வயது மிகத்தோன்றி. ௧௦

குத்திருமலோடுகையிற் கோற்பலமாய் நடந்து—மலைக்
குகைவனங்கள்கடந்து—வனக்
குறவர்மலைதுடர்ந்து—வள்ளி
குறத்தியுணித்துக் கவணெறியு[illegible]ிஞ்சியைக்கண்டடர்ந்து. ௧௧

பாங்கியர்களின்றிவள்ளி பரணதனின்மேவ—தினைப்
பயிர்விளைவுண்டாக—கிள்ளை
பறவைகட்குக்காவல்—மிகு
பதனமதாய்க்கவணெறிவாள்—பக்ஷிகண்மேற்றுவ. கஉ

சுந்தரமின் வள்ளியெழிற் கந்தனுங்கண்டானே—மனச்
சோபமாயநின்றானே—வளை
துலங்கிடமுன்றானே—ஓ ஓ
தோகையர்காள் வளையலென்றே—துவளநடந்தானே. கங

வளவிக்கிழச் செட்டிதனை வள்ளியுங் கண்பார்த்து—வளை
வர்ணமோபொன்மாத்து—இவன்
மருகிறதேகூத்து—ஐபா
வாருமிங்கே தொடுயெனக்கு—வாங்குவன்காண் தீர்த்து. கச

கிள்ளைமொழி வள்ளிஐபா கிழவனென்றதாலே—செவி
கேட்காதவன்போலே—மனக்
கொருவமுடன்கோலை—ஊன்றிக்
கிட்டியேதள்ளாடிப்பாண்—மூட்டநுழைந்தாரே. கரு

வாருமையாவளையல்செட்டி வளையல்விலை கூறும்நீர்
மகிழ்ந்துதகையாரும்—பசி
வன்கொடுமைதீரும்—எந்த
மாநகரம் பேரிணங்கள்—வகைவிபரங்கூறும். கசு

மங்கையரே நானிருக்கும் வடபழனிதேசம்—அதிற்
பெரியவர்கணேசம்—தொழில்
வளைசெய்பிரகாசம்—ஏழை
வருத்தத்தினாற்காட்டினிட—வழியில்வந்தேன்மோசம். கஎ

வளையல்செட்டி யாரேமோசம் வருவதுமொன்றில்லை—வேடர்
வாழ்குமிந்தயெல்லை—கதிர்
வளருந்தினைக்கொல்லை—குற
மாதுவள்ளி நானேகாவல்—வனத்திலென்றுதொல்லை. கஅ

பெண்ணரசே வளையல்விற்றே பிழைப்பதெந்தனாளும்—இங்கே
பேசுவரைக்காணும்—விலை
பெறுமிதமாய்த்தோணும்—வாங்கிப்
பெற்றவுடன் கலியாணம்—பெண்களுக்கேகாணும். ககூ

அழகான வளையல்விலை பரிவையர்க்குமுன்னால்—நீர்
அடுக்கும்விலைசொன்னால்—எங்கள்
தணிவேன்கரந்தன்னால்—[illegible]ங்கள்
அண்ணன்வரு முன்னம்வி[illegible]ன்னைச்சொல்லுமென்னால். உ௰

பச்சைவளை மிச்சம்பதி னுறுலக்ஷந்தானே—விலை
பகாவேன் மச்சமானே—மகா
வுபர்வுள துதானே—இதைப்
பார்க்கப்பசி தீருங்காரு—சேர்க்கவேசெந்தேனே. ௨௧

அணிவயிர மாயிரம்பொன் னன்னநடைமாதே—விலை
சொன்னதுதப்பாதே—ஒளிர்
மின்னலுமொப்பாதே—இதை
அணிபவர்க்கே கலியாணம்—ஆகிடுமெப்போதே. ௨௨

வார்த்தைமெத்தப் பேசுகிறீர் வளையல்செட்டிநீரும்—உமக்
கழகல்லகாண்போரும்—கைக்கு
வரும்விலையைக்கூறும்—பாங்கி
மார்கள்வருவார்கள்விலை—வசையுடனே தீரும். ௨௩

தங்கவளைக் கங்கணங்கணங்கையுனக்கினமாய்—நானே
தருவேனல்லகுணமாய்—நீயும்
அணிவாய்மகிழ்மனமா—யுன்றன்
றவளநகை யிதழுமிரு—தனந்தருவாய் சுகமாய். ௨௪

போங்காணும் வயதுசென்ற புத்திகெட்டசெட்டி—யூரை
சுற்றிங்காமட்டி—காமப்
புத்திகொண்டுவிட்டிற்—வளை
பொருந்தவிலை யுகந்திடச்சொற்—றருவன் றங்கக்கட்டி. ௨௫

சரசமுடன் வளையலிடுஞ் சாதியினுன்செட்டி—குலந்
தவறுவேனோகுட்டி—வசைத்
தாலுஞ்சீனிக்கட்டி—கொஞ்சம்
தயவுசெய்து தனந்தருவாய்—சமயமெனக்கிட்டி. ௨௬

விரைவுடனே வளையலிட்டால் வேணபொருள்தாரேன்—பொல்லா
வ. வீண்வார்த்தை கூறுதே—மிக
விருத்தரல்லோநீரே—வன
வேடரண்ணன் மார்கள்வரும்—வேளையறிவீரே. ௨௭

வாரும்வள்ளி மாதேயென்று வளையல்தனையெடுத்தார்—எட்டி
வலதுகையைப்பிடித்தார்—கையை
மாதுதள்ளிவிடுத்தாள்—பித்த
மயக்கந்தலைக்கேறுவதென்றே—மயங்கியே கீழ்ப்படுத்தார். ௨௮

வளையற்செட்டிக் கிழவன்விழு மார்க்கமதைகண்டாள்—என்ன
வாதையையோவென்றாள்—அண்ணன்
மார்வருவாரென்றாள்—ஐயா பக
வளையல்விற்கும் பெரியவரே—[illegible] கருளுமென்றாள். ௨௯

170863

பசித்துறக்கம் தருவதினாற் படுத்தனடிமாதே—நீயுந்
தடுப்பதுமொவ்வாதோ—யுன்னை
அடுத்ததுவீண்வாதே—நான்
படுத்ததற்குப் பாதிவிலை—யெடுத்துக்கொள்ளிப்போதே. ௫௰

கிழப்பயலே யுனக்குவந்த கேடிதென்னவம்பு—எங்கள்
கிளையோகுறக்கும்பு—வீணாப்
பழிகள்வரும்பின்பு—நான்
கிளருமொழிகேட் டெழுந்தாற்—கெடுதியில்லைநம்பு. ௫௧

குரல்மொழிகேட்டாலுமெந்தன் குறிப்புவிட்டுப்போமோ—மனக்
கரிப்பெனக்குண்டாமோ—மிகு
புகழுனக்கிதாமோ—வனக்
குறவர்வந்தேயெனைவதைத்தாற்—பழிகொலைவீண்போமோ. ௫௨

வளையல்விற்றே பிழைக்கவிங்கே வந்தகிழச்செட்டி—உன்றன்
சிந்தைமெத்தக்கட்டி—என்ன
விந்தையடாமட்டி—அண்ணான்
மாரறிந்தாலுன்னுயிரை—வாங்குவர்போயெட்டி. ௫௩

வளையலெல்லா மெடுத்துக்கோடி மாதெனைப்பேசாதே—சேரச்
சூழ்தனக்கூசாதே—மன
வாதனைபொல்லாதே—உந்தன்
மலர்க்கரந்தந்தாலொழிய—வெழுந்திறேனிப்போதே. ௫௪

நரைத்தகிழப் படுவாவுன்னை நானேகைப்பிடிப்பேன்—பிந்தக்
கானக்கொம்பாலடிப்பேன்—கபழம்
பானையைப்போட்டுடைப்பேன்-பொல்லா
நமனுய்வந்தா னிவன்கதையை—நானெங்கேபோயுரைப்பேன். ௫௫

வனக்குயிலே குறக்கொடியே வாதனைபண்ணீதே—எனை
வைவதுமெண்ணாதே—மணஞ்
செய்குவேன்எண்ணாதே—உந்தன்
மலர்க்கரந்தொட்டடித்தாலுமே—மகிழ்வேன் கண்ணாளே. ௫௬

கூனக்கிழப் படுவாநரைக் குடிகெடுத்தசெட்டி—புனைக்
கொடுங்கயத்தாற்கட்டி—பலி
கொளுங்கயத்திலவெட்டிப்—போடக்
கொண்டுபோக அண்ணன்வரு—வார்கள்போடாயெட்டி. ௫௭

எட்டிநடவென்றவள்ளிக் குட்டிகுறக்குட்டி—என்னைத்
திட்டுராய்வாய்ப்பட்டி—தாலி
கட்டுவேன்பார்க்கிட்டி—[illegible]டும்
வசினதாலிவடம்விட்டு—[illegible]புவேனேசெட்டி. ௫௮

அலைந்துகெட்டேவளையல்விற்கு மறிவுகெட்டமூடா—குலத்
தரிவைகிட்டுமோடா—மன
மாகுமாவீண்போடா—கெட்ட
அகந்தைசொல்லா தெழுந்துதினைப்-புனங்கடந்தேபோடா. ௩௯

பெண்ணரசே யெனக்குப்பசி பிழைக்கேனடிவள்ளி-எனைப்
பேசாதடிகள்ளி-யுயிர்
போகுமடிதுள்ளி-நான்
பிழைக்கவென்று விடித்ததினை-யுழக்குத்தாடிதெள்ளி. ௪0

பசியெனுஞ் சொற்கேட்டவுடன் பரிந்துவள்ளிமாஞள்—தினை
புரந்தமாவைத்தேனல்-விட்டுப்
பிசைந்துருட்டலானாள்-உண்ணும்
பக்குவமாய்க்கொடுக்கத்தின்றே-விக்கிக்கொண்டான்றானாய். ௪௧

போகுதடி யியுருடலைப் பிளந்துவெளிகண்ணி-விட்டுப்
போகுமுன்னே தண்ணீர்-கொஞ்சம்
புகட்டடிவாயுன்னு-யுயிர்.
போகுதடிபோகுதடி-போடிக்குறக்கன்னி. ௪௨

திகைத்துவள்ளி மரத்தைப்பற்றி யிழுத்துதண்ணீர்ச்சுனைக்கே-வெளி
விடுத்தாளந்தத்துறைக்கே. தண்ணீர்
குடித்துவயிற்பெறுக்கே-என்று
தேனின்மொழியாளுரைத்தே-யேறிவந்தாள்கரைக்கே ௪௩

வள்ளிகரையேறிடுமுன் றள்ளாடியக்கிழவன்-சுனைக்
குள்ளாகப்பேய்விழுவேன்-குற
வள்ளியைக்கைதொழுவன்-என்னை
மாளச்சுனையதனிற்றள்ளிப்-பேரணியாயென்றழுவன். ௪௪

வளையற்செட்டிசனிபிடிப்பான் வந்ததென்னகாலம்-இவன்
விந்தையலங்கோலம்—என்ன
சிந்தைஇந்திரஜாலம்—எறி
வாடாகெட்டுப் போவாயென்றே—வலதுகையையீந்தாள். ௪௫

கொடுத்தகையைப் பிடித்தான்சுனைக் குள்ளேமிகத்தா-வள்ளி
தள்ளாடிக்கீழ்விழ-இவன்
துள்ளிக்கைமேல்நீள-வள்ளி
கூக்குரலிட்டாள்கிழவன்-நோக்கிக்கரைமீள. ௪௬

மாதுடனே கிழவனிந்த வமையாகிற்குங்காலே-தினை
வனத்தினருகாலே-வேடர்
வருவதைக்கண்ணாலே-கண்டு
வாரும்மே பங்கை மாமதானன்-பி[illegible]ஞ்சு[illegible]மென்மேலே. ௪௭

நதியாடி வருபவன்போல் நங்கைவள்ளிமாது—கிழ
வன்காணுச்சூது—அண்ணர்
கண்காணுநீது—சொல்ல
காணமுற்றே வேடர்முன்போய்த்—தோரணிஞளப்போது சஅ

தங்கைவள்ளி தனைப்பார்த்து மங்களமாய்த்தானே—உயர்
றெங்கள்குலமானே—பரண்
தங்குமிடந்தானே—என்றுங்
தலத்திலில்லா வேங்கைமர—மூளைத்ததெப்போதேனே. சகூ

அண்ணர்களே யான்காக்கு மரியதினைக்கொல்லே—இங்கே
மரமிருப்பதில்லே—என்று
வருமோ விதிற்றொல்லே—இதை
அறவெட்டுங்கள் கனப்பிடலா—மதிசயமொன்றில்லே. ருo

தங்கையரே நீயிருந்து தானேவிளையாட—கிழல்
மேலேபந்தலாடத்—தென்றல்
வீசுமதிற்கூட—மரங்
தன்னிடத்தில் நம்மள்கந்த—சாமிபூசைபோட. ருக

என்றுசொல்லி வேடர்வன மேகியபின்னாலே—மரம்
ஆகினான்பின்னாலே—மையல்
மோகமாய்ப்பெண்மேலே—வேஷம்
எடுத்துச்சந்நியாசியைப்போல்—அடுத்தான்வள்ளிநேரே. ருஉ

ஆண்டியைப்போ லாகிவள்ளி யம்மையிடஞ்சென்றான்—பூதி
வெண்மையுறநின்றான்—வள்ளிப்
பெண்மயிலேயென்றான்—எந்தன்
ஆசையைத்தீராதிருந்தால்—மோசமல்லோவென்றான். ருஙு

முன்னமொரு கிழவன்வந்து தண்ணியிற்போய்விழுந்தான்—வளை
தன்னையுங்கையீய்ந்தான்—அவன்
என்னமோபோய்த்தோய்ந்தான்—அந்த
மோசத்தைப்போ லாண்டிசெப்ப—நேசம்வந்துபுகுந்தாய். ருச

முடிவெனக்குற்றாலுமண முடிக்காமற்போவேனோ—சிறை
பிடிக்காமற்சாவேனோ—இதழ்
குடிக்காமல்மீள்வேனோ—வேறே
மொழியுரைக்கலாமோவாண்டி—யெளியன்மேல்வீம்பேனோ. ருரு

ஆண்டிகெட்ட கேட்டுக்குப்பெண் மேண்டுமோகிர்மூடா—எல்லே
தாண்டிவெளிபோடா—மண்ணைத்
தோண்டுவேன்பேய்மோட—வுன்னை
அடித்துச்சிரமுடைப்பே[illegible]—வாணவஞ்சிபோடா. ருசூ

120863

நீயடிக்கமோக்ஷமிந்த நிமிஷத்தினிற்றனே—கிட்டும்
வரிசைக்குறமானே—என்னை
பிரியத்துடன்றனே—கொஞ்சம்
நினைக்காமலாண்பிள்ளையென்றே—வசைத்திருக்கிறாய்செந்தேனே.

பேசிவெட்கமில்லையடா பிச்சைக்கோமனாண்டி—மகா
லெச்சையோகெட்டாண்டி—சோறு
மிச்சமாய்தின்பாண்டி...குறப்
பெண்ணார்பபப்படுவாளடா—எண்ணாதேயோட்டாண்டி. ௫௮

பயமுனக்கில்லாதுநிசம் பாகலகுறக்கன்னி—என்றே
பரனடிமையுன்னி—அண்ணன்
கரிமுகனையெண்ணி—நிற்
பருவதம்போல் யானைதினைப்—பனையில்வந்தேகண்ணி. ௫௯

மும்மதங்கள் பொழியவண்டமுகடுகளும்வெடிக்க—மாக்
குவடுபேர்த்தடிக்க—ஆண்டி
குளிர்தோட்டமேடிபிடிக்க-வள்ளி
முறித்துகையைநெரித்தாண்டிமைப-மரித்துக்கட்டிப்பிடிக்க ௬௦

ஆனைவந்தேகொல்லுமடி யரிவையெட்டிக்கோடி-யுங்கள்
குறவர்குடிசையிற்போடி-நீயா
கெருவங்கொண்டகேடி-பெண்ணில்
அதிசயமோகுறத்தியெனை-மணக்கவென்றால்வாடி. ௬௧

உடல்பொருளாவிஷண்முகா வொப்புக்கொள்வாய்நிசமே-இது
தப்பாதுசத்தியமே-ஐயா
ஒப்புவேங்க்ஷபமே-என்று
உரியமொழிபகரவள்ளி-சுயமானாஞ்சண்முகமே. ௬௨

அறுமுகனைக் கண்டாள்மத யானைபைக்கண்காணாள்-கந்த
சாமியுறவானாள்-குற
பாதுமயலானாள்-செய்த
அபசாரமன்னிப்பீருந்த னடிமையையாயென்றாள். ௬௩

சண்முகனு மகிழ்ந்துகையாற் றழுவிமார்போடணைத்து-சுகம்
பெருகத்தன்னோடமைத்து-என்றும்
பிரியமதாய்ச்சுகித்துக்-கந்த
சாமிவள்ளியாருடனே—சந்ததம்வாழ்ந்தாரே ௬௪

சுப்பிரமணியர் வளையற்சிந்து முற்றிற்று.

அனுபவமானது!　　　பிரசித்தியடைந்தது!!　　　சஞ்சீவிபோன்றது!!

அயக்காந்த திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வமருந்தானது அநேக கொடியவியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது. இதை அனேக ஆயிரங் கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது கெட்ட சகவாசத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்திதருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேயமுறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையானமருந்து சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல்நோய்கண்டு அவஸ்தைப்படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டேவேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். ஆதனால் தீரக்கூடியஅநேகவியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.

நரைத்தமயிரைக் கறுப்பாக்கும். உஷ்ணத்தினாலாவது புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும். வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல்கைகால் காந்தல் இவை தீரும். முகவசிகரத்தை உண்டாக்கும், தேகஅசதியையோட்டும்ஜீரணசக்தியையும் நல்ல பசியையும் உண்டாக்கும். மனதைஅதிக உற்சாகப்படுத்தும். நரம்புகளுக்கு அதிகவலுவைத்தரும், தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும், வாதபித்த சிலேத்துமத்தாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்ததாதுகளுக்கும் நல்ல பலத்தைதரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல்இவைதீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 20-நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத்தரும். இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறுமருந்தே கிடையாது. 40-நாள் மருந்துஉட்கொள்ளும் பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூடஅணுகாது. தேகம் வஜ்ஜிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

இந்த திராவகத்தை உட்கொள்ளவேண்டிய முறை.

அரிக்கால் ஆழ ்க்கு சுத்தஜலத்தில் திராவகத்தை 5-துளி அல்லது 7-துளி அதில்விட்டுக் கலக்கிக் குடித்துவிடவேண்டும். பத்தியமே கிடையாது இதைப்பற்றிய விவரங்கள் பார்சலோடுவைத்துவரும்.

அரைமண்டலம் 20-நாளைக்கு வரக்கூடிய ஒருபுட்டியின் விலை
ரூபா 1 4 0　　　டஜன் 1-க்கு ரூபா—12.

ஒரு மண்டலம் 40-நாளைக்கு வரக்கூடிய ஒருபுட்டியின் விலை
ரூபா 2 0 0　　　டஜன் 1-க்கு ரூபா—21.

இப்படிக்கு,
பி. நா. சிதம்பர[illegible]தலியார் பிரதர்ஸ்,
பிரம்பூர் [illegible]க்ஸ் போஸ்டு, மதராஸ்.